# பாரதி தமிழ்ச் சங்கம்

(பதிவு எண்: 2197/417 of 1954-55)

93ஏ, ராஷ் பிஹாரி அவென்யூ, கொல்கத்தா – 700 026

தொலைபேசி: +91 33 2466 5685

மின்னஞ்சல்: kolkatatamilsangam@yahoo.co.in வலைத்தளம்: www.kolkatatamilsangam.org

Estd. 1941

## உறுப்பினர்களுக்கு மட்டும்

சங்கத்தின் எழுபத்தெட்டாம் ஆண்டுப் பேரவை 22.09.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்க அரங்கில் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்:

1. கடந்த ஆண்டுப் பேரவையின் நிகழ்ச்சிக் குறிப்புகள்
2. 2018 – 2019 ஆம் ஆண்டறிக்கை
3. 2018 – 2019 ஆம் ஆண்டுக் கணக்குகள்
4. 2019 – 2020 ஆம் ஆண்டிற்கான செயற்குழு தேர்தல்
5. 2019 – 2020 ஆம் ஆண்டிற்கான தணிக்கையாளர் நியமனம்
6. தீர்மானங்கள் - பிறசெய்திகள்

கொல்கத்தா — செயற்குழு ஆணைப்படி

29.08.2019 — எல். எம். அனந்த பத்மநாபன்

செயலாளர்

குறிப்புகள்: 2019–2020 ஆம் ஆண்டிற்குக் கீழ்க்கண்டவர்கள் அடங்கிய செயற்குழு பேரவையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

1. ஒரு தலைவர்
2. ஒரு துணைத் தலைவர்
3. ஒரு செயலாளர்
4. ஒரு துணைச் செயலாளர்
5. ஒரு பொருளாளர்
6. ஐந்து செயற்குழு உறுப்பினர்கள்

P.T.O

மேற்குறிப்பிட்ட பல்வேறு பதவிகளுக்கும் உறுப்பினர்களை நியமிக்க விரும்புவர்களின் வேட்பு மனுக்களை 15.09.2019 ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்குள் சங்க அலுவலகத்தில் சேர்ப்பித்தல் வேண்டும். வேட்பு மனு என்று குறித்து மூடப்பெற்ற உறையில் மனுக்களை அனுப்ப வேண்டும்.

வேட்பு மனுக்களில் முன்மொழிபவர் ஒருவர், வழிமொழிபவர் இருவர், குறிப்பிட்ட பதவியை ஏற்க இசையும் வேட்பாளர் ஆகியோருடைய பெயர், முகவரி, கையொப்பம், தேதி முதலியன இடம்பெற வேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களின் விவரம் 16.09.2019 திங்கட்கிழமை காலை 8 மணிக்கு சங்கத்தின் அறிவிப்புப் பலகையில் வெளியிடப்படும். வேட்பு மனுவைத் திரும்பப்பெற விரும்புவோர் 18.09.2019 புதன்கிழமை மாலை 7 மணிக்குள் சங்க அலுவலகத்தில் கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டும். அதன் பின் இறுதியாக உள்ள வேட்பு மனுக்களின் விவரம் அன்றிரவு 8 மணிக்கு சங்கத்தின் அறிவிப்புப் பலகையில் வெளியிடப்படும்.

பேரவையில் நிறைவேற்றவும், விவாதிக்கவும், உறுப்பினர் கொண்டுவர விரும்பும் தீர்மானங்களை மூடப்பெற்ற உறையிலிட்டு 16.09.2019 திங்கட்கிழமை மாலை 7 மணிக்குள் சங்க அலுவலகத்தில் சேர்ப்பித்தல் வேண்டும்.

முக்கிய குறிப்புகள்: சங்க விதிகளின்படி பேரவைக் கூட்டம் நடக்கும் மாதத்திற்கு முன் மூன்று மாதங்களுக்கு மேல் சந்தா பாக்கி இல்லாதவர்களுக்கு மட்டுமே வேட்பு மனுவைத் தாக்கல் செய்வதற்கும், பேரவையில் வாக்களிப்பதற்கும் உரிமை உண்டு. வேட்பு மனுத்தாள், ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் ஆகியவற்றை சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் மின்னஞ்சலில் மட்டுமே அனுப்பப்படும். உறுப்பினர்கள் தங்களது மின்னஞ்சல் முகவரியை சங்க அலுவலகத்தில் கொடுக்கவும்.

(அலுவலக நேரம்: மாலை 6 மணி முதல் 8 மணி வரை)
பேரவை துவங்குவதற்கு முன் சிற்றுண்டி வழங்கப்படும்.